**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.149/2024**

**வா.சா.–1 – பிரேம்குமார் , த/பெ. உதயகுமார்**

**நாள். 24.04.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனக்கு நிரந்தர வருமான வரி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. ஒவ்வொரு நிதியாண்டும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேனா என்றால் தாக்கல் செய்து வருகிறேன். ரூ.25 ஆயிரத்திற்கு மேல் ஒருவருக்கு பணபரிமாற்றம் செய்ய வேண்டும் என்றால் வங்கி மூலமாகத்தான் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றால் சரிதான். தாவா வழக்கின் ஈடுகடன் பத்திரம் ஏற்படுத்திய போது எனது வருமான வரி கணக்கில் அது குறித்து காட்டியுள்ளேனா என்றால் காட்டியுளேன். அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ஈடுகடன் சொத்தை பிரதிவாதியின் தகப்பனார் சக்தி அவரது மகன் சிவசுப்புராஜ்க்கு தான செட்டில்மெண்ட்டாக எழுதி வைத்தது என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனாரின் தகப்பனார் சுப்பு கவுண்டருக்கு 08.11.1982ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட பாகவிஸ்தி பத்திரம் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்து என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 4 பிள்ளைகள் இருக்கிறார்கள், 1. இறந்து போன சிவசுப்புராஜ், 2 . ஜெகதீஷ்., 3 . சதீஷ், 4. காயத்திரி, ஆகியோர்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். ஈடுகடன் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்தில் மேற்படி காட்டப்பட்டுள்ள 4 பேருக்கும் இந்து வாரிசுரிமை சட்டப்படி அவர்களுக்கும் சொத்தில் பங்கு உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு 4ல் 1 பங்குதான் சித்தித்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆரம்ப கால கட்டத்தில் என்னிடம் தொகை ரூ.2 லட்சம் தாவா சொத்தில் 902 சதுரடியை பொறுத்து கிரையம் பதிந்து கொள்ளலாம் என அட்வான்சாக வாங்கினார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பேரில் பிரதிவாதி என்னிடம் ரூ.8 லட்சம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் எனக்கு கிரையம் வேண்டாம் என சொன்னதன் பேரில் பிரதிவாதி ரூ.2 லட்சத்தை தயாராக இருந்தார் என்றால் சரியல்ல. நான்தான் கட்டாயப்படுத்தி தாவா சொத்தை எழுதி வாங்கி கொள்ளலாம் என்ற எண்ணத்தில் பிரதிவாதியை ஏமாற்றி ஈடுகடன் பத்திரம் எழுதி வாங்கி விட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பலமுறை என்னிடம் ஈடுகடன் பத்திரத்தை இரத்து செய்யுமாறு கேட்டு வந்தார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் இருந்து துர்லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் பிரதிவாதி

அசலோ, வட்டியோ கொடுக்க வேண்டியதில்லை என்றாலும், பிரதிவாதி வாங்கிய தொகை திருப்பி தர தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்லியது போல் பிரதிதிவாதி என்னிடம் ரூ.100 க்கு ரூ.1 வட்டி என்ற விகிதத்தில் என்னிடம் தொகை வாங்கவில்லை என்றால் சரியல்ல. எந்தவித கால கெடுவும் நிர்ணயித்து எந்த ஈட்டுக் கடன் பத்திரமும பிரதிவாதி எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கைக்காக ஏற்படுத்தப்பட்ட ஈடுகடன் பத்திரப்படி மேற்படி ரூ.8 லட்ச தொகையில் கூடுதலாக வட்டியுடன் செலுத்தக் கோரி தாக்கல் செய்துள்ள தாவா வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஈடுகடன் பத்திரம் பொறுப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட பத்திரம் என்றால் சரியல்ல. இது ஒரு Sham and nominal பத்திரம் என்றால் சரியல்ல. அதனால் சட்டப்படி நிறைவேற்ற முடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.27 21:11:48 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.